00018

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**முகாமைத்துவ கற்கைகள் பீடம்**

**இளமாணி முகாமைத்துவ கற்கைகள் சிறப்புப் பட்டப்படிப்பு**

**AFU3571 - நிதியியல் கணக்கீடு**
**இறுதிப் பரீட்சை - 2025/2026**
**காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

**திகதி: 5 ஜூலை 2026** **நேரம்: பி.ப. 01.30 – 04.30**

**அறிவுறுத்தல்கள்:**

- இவ் வினாத்தாள் நான்கு (04) வினாக்களைக் கொண்டுள்ளது. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
- இவ் வினாத்தாள் நான்கு (04) தட்டச்சு செய்யப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது.
- அனைத்து செய்கைவழிமுறைகளும் விடைத்தாளில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.
- ஒவ்வொரு வினாவுக்குமான புள்ளிகள் வினாவின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- நிரல்படுத்தப்படாத கணிப்பான்களின் பயன்பாடு அனுமதிக்கப்படுகிறது.

**வினா 01**

அ) 31 மார்ச் 2026 இல் அலெக்ஸ் நிறுவனத்தின் பரீட்சை மீதியிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

| விபரங்கள் | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| மூலதனம் (01.04.2025) | | 18,800 |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணம் (கிரயத்தில்) | | |
| காணி மற்றும் கட்டிடம் | 7,500 | |
| மோட்டார் வாகனங்கள் | 10,000 | |
| அலுவலக உபகரணங்கள் | 9,000 | |
| திரட்டப்பட்ட தேய்மானம் (01.04.2025) | | |
| கட்டிடம் | | 1,000 |
| மோட்டார் வாகனங்கள் | | 2,500 |
| அலுவலக உபகரணங்கள் | | 3,500 |
| வங்கியிலுள்ள காசு | 3,000 | |
| கையிலுள்ள காசு | 3,000 | |
| வியாபாரப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் | 9,500 | 6,000 |
| விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் | 10,500 | 32,000 |
| இருப்பு (01.04.2025) | 8,000 | |
| 5% வங்கிக் கடன் | | 4,500 |
| சம்பளங்கள் | 3,500 | |
| துப்பரவுச் செலவுகள் | 2,500 | |
| மின்சாரம் | 1,500 | |
| தரகுப்பெறுவனவு (Commission Received) | | 1,500 |
| தொலைபேசி கட்டணங்கள் | 1,000 | |
| வாடகை வருமானம் | | 1,200 |
| தரகு கட்டணங்கள் | 2,000 | |
| | **71,000** | **71,000** |

பின்வரும் மேலதிகதகவல்களும் வழங்கப்பட்டுள்ளன:

1. 31 மார்ச் 2026 அன்றிலுள்ள இறுதி இருப்பு கிரயத்தில் ரூ. 5,750,000 மற்றும் அதன் நிகரத்தக்கப் பெறுமதி (NRV) ரூ. 5,500,000 ஆகும்.

2. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கான தேய்மானம், பின்வரும் விகிதங்களில் நேர்கோட்டு முறையைப் (Straight-line) பயன்படுத்தி வழங்கப்பட வேண்டும்.
   - மோட்டார் வாகனங்கள்: ஆண்டுக்கு 15%
   - கட்டிடம்: ஆண்டுக்கு 10% (நிலத்தின் மதிப்பு: ரூ. 4,000,000)
   - அலுவலக உபகரணம்: ஆண்டுக்கு 5%
3. நிறுவனமானது 01 ஜூலை 2025 அன்று வங்கிக்கடனைப் பெற்றது.
4. ஆண்டு இறுதியில், நடப்பு ஆண்டிற்கான ரூ. 200,000 மதிப்பிலான துப்பரவுச் செலவுகள் செலுத்தப்படாமல் உள்ளது.
5. 01 ஏப்ரல் 2025 முதல் 15 மாதங்களுக்கான தரகுக்கட்டணமானது முற்பணமாக செலுத்தப்பட்டுள்ளது.
6. ஆண்டில் பெறப்பட்ட தரகுத்தொகையில் (out of commission received), 75 சதவீதம் மட்டுமே நடப்புக் கணக்கியல் காலத்திற்குரியதாகவும் (current accounting period), மீதமுள்ளவை அடுத்த கணக்கியல் காலத்திற்குரியது (next accounting period).
7. கணக்கியல் காலத்திற்கான மொத்த வாடகை வருவாயில், 90 சதவீதம் மட்டுமே வசூலிக்கப்பட்டுள்ளது.
8. நிறுவனமானது ரூ. 200,000 தொகையை அறவிடமுடியாக்கடனாக (bad debt) தள்ளுபடி செய்ய முடிவு செய்துள்ளது. மேலும், இதற்கு முன்னர் எந்த ஒதுக்கீடும் இல்லாததால், வியாபரப்பெறுவனவு நிலுவைத் தொகையில் 5% என்ற விகிதத்தில் ஐயக்கடனாக ஏற்பாடு (doubtful debt) செய்ய முடிவு செய்யப்பட்டது.

வேண்டப்படுவது :

1) அலெக்ஸ் நிறுவனத்தின், 31 மார்ச் 2026 அன்று முடிவடைந்த ஆண்டுக்கான வருமான கூற்றினை தயாரிக்குக.
2) அலெக்ஸ் நிறுவனத்தின், 31 மார்ச் 2026 அன்றிலுள்ள நிதிநிலைமைக்கூற்றினைத் தயாரிக்குக (30 புள்ளிகள்)

ஆ) நிதி கணக்கீட்டு தகவல்களில் ஆர்வமுள்ள ஐந்து பங்குதாரர்களைப் பெயரிட்டு, ஒவ்வொரு பங்குதாரரின் ஆர்வத்திற்கான காரணத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

**(40 புள்ளிகள்)**

**வினா 02**

பின்வரும் பரிவர்த்தனைகள், 2026 மார்ச் மாதத்திற்கான திரு. ஆவின் வணிகம் தொடர்பானவை ஆகும்.

1) 01/03/2026: திரு. ஆவின் ரூ. 600,000 காசாகவும், ரூ. 900,000 மதிப்புள்ள தளபாடமாகவும் ரூ. 750,000 மதிப்புள்ள அலுவலக உபகரணமாகவும் முதலீடு செய்து வணிகத்தினை ஆரம்பித்தார்.
2) 02/03/2026:வணிகத்திலுள்ள காசிலிருந்து ரூ. 250,000 வணிக வங்கிக்கணக்கில் வைப்புசெய்யப்பட்டது.
3) 03/03/2026:திரு. சாம் என்பவரிடமிருந்து ரூ. 180,000 மதிப்புள்ள பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு, ரூ. 80,000 காசோலை மூலமும், மீதித் தொகையை பின்னர் தீர்க்க ஒப்புக்கொள்ளப்பட்டது.
4) 05/03/2026: வங்கிக் கடன் பெற்று ரூ. 900,000 மதிப்புள்ள மோட்டார் வாகனத்தை கொள்வனவு செய்தார்.
5) 07/03/2026: திரு. கெவினுக்கு ரூ. 140,000 மதிப்புள்ள பொருட்களை விற்று, ரூ. 60,000 காசினைப் பெற்றார்.
6) 09/13/2026: திரு. கெவின் நிலுவையிலுள்ள கணக்கை முழுமையாகத் தீர்ப்பதற்காக ரூ. 75,000 செலுத்தினார்.
7) 11/03/2026: வாடகை ரூ. 24,000 காசோலை மூலம் செலுத்தப்பட்டது.
8) 14/03/2026: திரு. சாமிற்கு ரூ. 25,000 மதிப்புள்ள பொருட்கள் திருப்பி அனுப்பப்பட்டது.

9) 17/03/2026: பெறப்பட்ட ரூ. 8,000 தள்ளுபடியைக் கழித்த பிறகு, திரு. சாமுக்குச் செலுத்த வேண்டிய முழுத் தொகையும் தீர்க்கப்பட்டது.
10) 20/03/2026: தரகு வருமானமாக ரூ.30,000 பெறப்பட்டது.
11) 24/03/2026: உரிமையாளர் தனது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக ரூ. 20,000 காசினையும், ரூ. 15,000 மதிப்புள்ள பொருட்களையும் எடுத்தார்.
12) 31/03/2026: உரிமையாளரால் நேரடியாக வணிக வங்கிக் கணக்கில் ரூ. 100,000 மேலதிக மூலதனம் அறிமுகப்படுத்தப்பட்டது.

தேவைப்படுபவை;

1. ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் இரட்டைப் பதிவினை எழுதுக. (10 புள்ளிகள்)
2. அடிப்படை கணக்கியல் சமன்பாட்டில் ஒவ்வொரு பரிவர்த்தனையின் தாக்கத்தைப் பதிவு செய்க. (10 புள்ளிகள்)

**(20 புள்ளிகள்)**

**வினா 03**

அ) காசேட்டு மீதிக்கும் (Cash book balance) வங்கி அறிக்கை மீதிக்கும் (Bank Statement balance ) இடையே உள்ள வேறுபாடுகளுக்கான நான்கு முக்கிய காரணங்கள் விளக்குக. (04 புள்ளிகள்)

ஆ) 31 மார்ச் 2026 அன்று திரு. ரவீனின் காசுப் புத்தகம் ரூ. 158,500 செலவு மீதி காட்டியது. வங்கி அறிக்கையுடன் ஒப்பிடும்போது, பின்வரும் வேறுபாடுகள் கண்டறியப்பட்டன:

1) இம்மாதத்திற்குள் வழங்கப்பட்ட ரூ. 42,000 மதிப்புள்ள காசோலைகள் இன்னும் பணம் செலுத்துவதற்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை (not yet presented).
2) இம்மாதத்திற்குள் பெறப்பட்ட ரூ. 8,500 மதிப்புள்ள காசோலைகள் வங்கியில் வைப்பிலிடப்பட்டது, ஆனால் இன்னும் வரவு வைக்கப்படவில்லை (not yet credited by the bank).
3) ரூ. 2,500 வங்கி கட்டணம், வங்கி அறிக்கையில் மட்டுமே காணப்பட்டது.
4) ஒரு வாடிக்கையாளர் நேரடியாக ரூ. 18,000 ஐ வங்கிக் கணக்கில் வைப்பீடு செய்துள்ளார்.
5) ரூ. 4,000 வட்டி வருமானம் வங்கியால் வரவு வைக்கப்பட்டது, ஆனால் காசுப் புத்தகத்தில் இன்னும் பதிவு செய்யப்படவில்லை.
6) நிலையான கட்டளை (standing order) கட்டணம் ரூ. 8,000 வங்கி அறிக்கையில் மட்டுமே காணப்பட்டது.
7) ரூ. 1,500 காசோலை புத்தக கட்டணங்கள் வங்கியால் மட்டுமே பற்று (debited) வைக்கப்பட்டது.
8) பிப்ரவரி 2026 இல் வழங்கப்பட்ட ரூ. 9,000 மதிப்புள்ள காசோலைகள் 31 மார்ச் 2026 நிலவரப்படி இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை.

தேவைப்படுபவை;

1) மார்ச் 31, 2026 இன் படி சீராக்கப்பட்ட காசுப் புத்தகத்தைத் தயாரிக்குக.
2) சீராக்கப்பட்ட காசுப் புத்தக மீதியிலிருந்து தொடங்கி, மார்ச் 31, 2026 இன் படி வங்கி இணக்கக்கூற்றை தயாரிக்குக. (16 புள்ளிகள்)

**(20 புள்ளிகள்)**

**வினா 04**

அ) ஒரு உற்பத்தி நிறுவனத்தின் 31 மார்ச் 2026 இல் முடிவடையும் ஆண்டிற்கான பின்வரும் தகவல்களை வழங்கியது:

- ஆரம்ப மூலப்பொருள் இருப்பு ( Opening Raw Material Inventory) – ரூ. 50,000
- மூலப்பொருள் கொள்வனவு (Purchases of Raw Materials) - ரூ. 300,000
- நேர் ஊழிய கிரயம் (Direct Labour Cost) – ரூ. 180,000
- தொழிற்சாலை வாடகை (Factory Rent) – ரூ. 60,000

- இறுதி மூலப்பொருள் இருப்பு (Closing Raw Materail Inventory)– ரூ. 40,000
- அலுவலக வாடகை (Office Rent)– ரூ. 30,000
- தொழிற்சாலை மின்சாரம் (Factory Electricity) – ரூ. 20,000
- தொழிற்சாலை உபகரணங்களின் தேய்மானம் (Depreciation of Factory Equipment) – ரூ. 40,000
- நேரில் தொழிற்சாலை ஊதியங்கள் (Indirect Factory Wages) – ரூ. 25,000
- விளம்பரச் செலவுகள் (Advertising Expenses) – ரூ. 20,000
- நிர்வாக கட்டிடத்திற்கான காப்பீட்டுச் செலவு - ரூ. 15,000

தேவைப்படுபவை; கணக்கிடுக:

1. நுகரப்பட்ட மூலப்பொருட்களுக்கான கிரயம் (Cost of raw materials consumed)
2. முதன்மைச் செலவு (Prime Cost)
3. மொத்த உற்பத்திச் செலவு (Total Manufacturing Cost) (06 புள்ளிகள்)

ஆ) நிதி அறிக்கைகளை (Financial statement) பகுப்பாய்வு செய்ய நிதி விகிதங்கள் (Financial ratios) பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. வணிகங்களால் பயன்படுத்தப்படும் ஏதேனும் நான்கு நிதி விகித வகைகளைப் பெயரிட்டு, விகித பகுப்பாய்வின் (ratio analysis) முக்கியத்துவத்தைப் பற்றி விளக்குக . (04 புள்ளிகள்)

இ) 31 மார்ச் 2026 அன்று சம்பத் வணிகத்தின் பரீட்சை மீதி ஒத்துப்போகவில்லை, மேலும் கணக்குகளைச் சமன் செய்வதற்காக ரூ. 19,200 செலவு மீதியுடன் (debit balance) ஒரு தொங்கல் கணக்கு (suspense account) உருவாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பின்வரும் பிழைகள் கண்டறியப்பட்டன:

1. ரூ. 12,000 மதிப்பிலான காசுக்கு கொள்வனவு கணக்குப் புத்தகங்களிலிருந்து முற்றிலுமாக விடுபட்டிருந்தது.
2. ரூ. 10,000 மதிப்பிலான விற்பனையானது விற்பனைக்கணக்கில் இரண்டு முறை பதிவு செய்யப்பட்டுள்ளது.
3. கடன்பெறுனரிடமிருந்து பெறப்பட்ட ரூ. 25,000 காசானது, காசுப்புத்தகத்தில் சரியாகப் பதிவு செய்யப்பட்டது, ஆனால் கடன்பெறுனர் கணக்கில் பதிவுசெய்யப்படவில்லை.
4. பெறப்பட்ட தள்ளுபடி (Discount received) ரூ. 12,000, அனுமதிக்கப்பட்ட தள்ளுபடி (Discount Allowed) கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.
5. ரூ. 18,000 மதிப்புள்ள விற்பனைத் திருப்பங்கள் (sales returns) கடன்பெறுனரின் கணக்கில் மட்டுமே பதியப்பட்டுள்ளன.
6. செலுத்தப்பட்ட காப்பீடான ரூ. 5,000 மின்சார கட்டணக் கணக்கில் பற்று (debited) வைக்கப்பட்டுள்ளது.
7. ரூ. 40,000 வாடகையானது, வாடகைக் கணக்கில் ரூ. 4,000 ஆக பற்று வைக்கப்பட்டுள்ளது.
8. திரு. ரோவனிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 30,000 மதிப்புள்ள பொருட்கள் புத்தகங்களிலிருந்து முழுமையாக விடுபட்டுள்ளன.
9. ஒரு வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட ரூ. 22,000 மதிப்புள்ள காசோலை வங்கிக் கணக்கில் சரியாகப் பதியப்பட்டது, ஆனால் வாடிக்கையாளரின் கணக்கில் ரூ. 2,200 என வரவு வைக்கப்பட்டது.
10. ரூ. 6,000 மதிப்புள்ள விற்பனை, விற்பனைக் கணக்கிற்குப் பதிலாகத் தவறுதலாகக் கொள்வனவுக்கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

நீங்கள் செய்ய வேண்டியது;

1. பிழைகளைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளை எழுதுக.
2. தொங்கல் கணக்கைத் (suspense account) தயாரிக்குக. (10 புள்ளிகள்)

**(20 புள்ளிகள்)**

**மொத்தம் = 100 புள்ளிகள்**

-பதிப்புரிமையுடையது-